தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் பறிமுதல்

தேனி, ஜூன் 20: தேனியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை போலீஸார் பறிமுதல் செய்து, அவற்றை காரில் கடத்தியவரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

தேனி அல்லிநகரம் வீரப்ப அய்யனார் கோவில் சாலையில் போலீஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்டனர். காரில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்பனை செய்வதற்காகக் கடத்திச் சென்றது தெரியவந்தது.

பின்னர், காரில் இருந்த தேனி அல்லிநகரம் வி.எம்.சாவடி தெருவைச் சேர்ந்த ரங்கராஜை (49) போலீஸார் கைது செய்து, அவரிடமிருந்த 37 கிலோ புகையிலைப் பொருள்களை பறிமுதல் செய்தனர்.

மஞ்சளாறு அணை நீர்மட்டம் 55 அடியாக உயர்வு

3–ஆம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை

தேனி, ஜூன் 20: தேனி மாவட்டம், மஞ்சளாறு அணை நீர்மட்டம் 55 அடியாக வியாழக்கிழமை உயர்ந்ததால், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் மஞ்சளாறு கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பொதுப் பணித் துறை சார்பில் 3–ஆம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கொடைக்கானல் மலைப் பகுதியில் மழை பெய்து வருவதால் மஞ்சளாறு அணைக்குத் தொடர்ந்து தண்ணீர் வரத்து இருந்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து கடந்த மே 30–ஆம் தேதி 51 அடியை (அணையின் மொத்த உயரம் 57 அடி) எட்டியது. தொடர் மழையால் கடந்த ஜூன் 5–ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 53 அடியாக உயர்ந்தது.

இந்த நிலையில், தற்போது அணை நீர்மட்டம் 55 அடியாக உயர்ந்தது. இதனால், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் மஞ்சளாறு கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பொதுப் பணித் துறை சார்பில் 3–ஆம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அணையின் பாதுகாப்புக் கருதி அணைக்கு வினாடிக்கு 94 கன அடி வீதம் வரும் உபரி நீர் அப்படியே முழுமையாக வெளியேற்றப் படுகிறது. மஞ்சளாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, சிவஞானபுரம், வத்தலகுண்டு ஆகிய ஊர்களில் மஞ்சளாறு கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும், ஆற்றைக் கடக்கவோ, ஆற்றில் குளிக்கவோ கூடாது என்றும் பொதுப் பணித் துறை பொறியாளர்கள் எச்சரித்தனர்.

மஞ்சளாறு அணை நீர்மட்டம் 55 அடியாக உயர்ந்ததால் அணையிலிருந்து வியாழக்கிழமை திறந்துவிடப்பட்ட உபரிநீர்.

தோட்ட மேலாளரைத் தாக்கிய மூவர் மீது வழக்கு

போடி, ஜூன் 20: போடியில் தோட்ட மேலாளரைத் தாக்கிய மூவர் மீது போலீஸார் வியாழக்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

தேனி மாவட்டம், போடி கீழத் தெருவைச் சேர்ந்த சேதுராமன் மகன் சுரேஷ் (38). இவர் போடி அணைப் பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள தனியார் தோட்டத்தில் மேலாளராக வேலை பார்த்து வருகிறார். இந்தத் தோட்டத்துக்கு அருகே விவசாயம் செய்யும் வனராஜி, பொன்னுத்தாய், தெய்வம் ஆகியோர் சுருளி வேல் தோட்டத்தில் அத்துமீறி நுழைந்து வேலிக் கற்களை சேதப்படுத்தினர். இதை சுரேஷ் தடுத்தார். அப்போது, 3 பேரும் சேர்ந்து சுரேசைத் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தனர்.

இதுகுறித்து போடி நகர் காவல் நிலைய போலீஸார் வனராஜி உள்ளிட்ட 3 பேர் மீதும் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

குற்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட வேன் தீப்பிடித்து எரிந்தது

ஒட்டன்சத்திரம், ஜூன் 20: வழக்கில் பறிமுதல் செய்யப்பட்டு, கள்ளிமந்தையம் காவல் நிலையம் முன் நிறுத்தப்பட்டிருந்த வேன் தீப்பிடித்து எரிந்தது.

ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள கள்ளிமந்தையம் பகுதியில் குற்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட கார், இரு சக்கர வாகனம், வேன் உள்ளிட்ட வாகனங்கள் இங்குள்ள காவல் நிலையம் முன் நீண்ட நாள்களாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல வாகனங்கள் உருக்குலைந்து காணப்படுகின்றன. இந்த நிலையில், வழக்கு ஒன்றில் பறிமுதல் செய்யப்பட்டு அங்கு நிறுத்தப்பட்டிருந்த மினி வேனில் திடீரென தீப்பிடித்தது. தகவலறிந்து ஒட்டன்சத்திரம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று தீயை அணைத்தனர். தீ விபத்து குறித்து கள்ளிமந்தையம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கள்ளிமந்தையம் காவல் நிலையம் முன் தீப்பிடித்து எரிந்த வேன்.

ஆதரவற்ற பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்பு தொடக்கம்

கொடைக்கானலில் சுழற் சங்கம் சார்பில் ஆதரவற்ற பெண்களுக்கு இலவச பயிற்சி மையத்தை வியாழக்கிழமை திறந்துவைத்துப் பார்வையிட்ட கோர்சாக் நிறுவனர் தலைவர் சாம் ஆப்ரகாம்.

கொடைக்கானல், ஜூன் 20: கொடைக்கானலில் ஆதரவற்ற, கணவரை இழந்த பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை தொடங்கியது.

இந்த பயிற்சி வகுப்பை கோர்சாக் நிறுவனத்தின் தலைவர் சாம் ஆப்ரகாம் தொடங்கிவைத்துப் பேசினார். நிகழ்வுக்கு சுழற் சங்க முன்னாள் ஆளுநர் சாம்பாபு தலைமை வகித்தார். தலைவர் மதன் முன்னிலை வகித்தார். இதில் சுழற் சங்கச் செயலர் சேட், நிர்வாகி ராபின், கோர்சாக் நிறுவன பணியாளர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, சுழற் சங்க ஒருங்கிணைப்பாளர் ரத்தினி வரவேற்றார். சுழற் சங்க முன்னாள் தலைவர் ஜெயபிரசாத் நன்றி கூறினார். கொடைக்கானல் சுழற் சங்கம் சார்பில் ஆதரவற்ற, விதவை பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்பு 3 மாதம் நடைபெறவுள்ளது. இந்த வகுப்பு முடிந்தவுடன் அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப்படும்.

குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்

உத்தமபாளையம், ஜூன் 20: கம்பத்தில் குழாய் உடைந்து குடிநீர் வீணாக கழிவுநீர்க் கால்வாயில் கலக்கிறது.

தேனி மாவட்டம், கம்பத்தை அடுத்த லோயர் கேம்ப் முல்லைப் பெரியாற்றிலிருந்து தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு, பெரிய குழாய்கள் வழியாக லோயர் கேம்ப், கூடலூர், கம்பம், க.புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் ஆகிய பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகிப்பதற்காக லோயர் கேம்ப்பிலிருந்து உத்தமபாளையம் வரை நெடுஞ்சாலையோரத்தின் வழியாக பெரிய குழாய் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கம்பம் உத்தமபுரம் பகுதியில் பதிக்கப்பட்ட குழாயில் உடைப்பு ஏற்பட்டு, கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக குடிநீர் வீணாக வெளியேறி, கழிவுநீர்க் கால்வாயில் கலக்கிறது. தற்போது, வரை பல லட்சம் லிட்டர் குடிநீர் வீணாகியுள்ளதாகவும், விரைந்து உடைப்பை சீரமைத்து குடிநீர் வீணாவதைத் தடுக்கவும் வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது:

இந்தக் குழாய் வழியாக க.புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் ஆகிய 3 பேரூராட்சிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பேரூராட்சிகளில் கடந்த சில மாதங்களாக பொதுமக்களுக்கு முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை.

க.புதுப்பட்டி பேரூராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய வலியுறுத்தி, கடந்த 10 நாளில் 2 முறை சாலை மறியல் நடைபெற்றுள்ளது. இதேபோல, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் 10 நாள்களுக்கு ஒருமுறையே குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே, குழாயைச் சீரமைத்து, குடிநீர் வீணாவதைத் தடுக்க சம்பந்தப்பட்ட துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கம்பம் உத்தமபுரத்தில் குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்.

காளையை குளிப்பாட்டச் சென்றவர் கண்மாயில் மூழ்கி பலி

மதுரை, ஜூன் 20: மதுரை மாவட்டம், வெளிச்சநத்தம் அருகேயுள்ள மீனாட்சிபுரத்தைச் சேர்ந்தவர் பாண்டி (50). இவர் தனது வீட்டில் ஜல்லிக்கட்டு காளையை வளர்த்து வருகிறார். இந்த நிலையில், புதன்கிழமை மது போதையில் காளையை குளிப்பாட்டுவதற்காக வி.மீனாட்சிபுரம் கண்மாய்க்கு அழைத்துச் சென்றவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதையடுத்து, குடும்பத்தினர் கண்மாய்க்கு சென்று பார்த்த போது, காளை மட்டும் இருந்தது. இந்த நிலையில், இரவில் பாண்டியின் உடல் கண்மாயில் மிதந்துள்ளது.

இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த எம்.சத்திரப்பட்டி போலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அவரது உடலை மீட்டனர். மேலும் இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

காளையார்கோவில் அருகே மாட்டு வண்டிப் பந்தயம்

சிவகங்கை, ஜூன் 20: சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே உள்ள கீழவலையம்பட்டி மகாலிங்கேஸ்வரர் கோயில் திருவிழாவையொட்டி, மாட்டு வண்டி எல்கைப் பந்தயம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பெரிய மாட்டு வண்டிக்கு கீழவலையம்பட்டியிலிருந்து மறவமங்கலம் வரையில் 8 கி.மீ. தொலைவும், சிறிய மாட்டு வண்டிக்கு 6 கி.மீ. தொலைவும் பந்தய எல்லைகளாக நிர்ணயிக்கப்பட்டன. பெரியமாடு பிரிவில் 8 ஜோடி மாடுகளும், சிறிய மாடு பிரிவில் 12 ஜோடி மாடுகளும் பங்கேற்றன. இரு பிரிவுகளிலும் முதல் நான்கு இடங்களில் வெற்றி பெற்ற மாட்டு வண்டி உரிமையாளர்களுக்கும், வண்டி ஓட்டிய சாரதிகளுக்கும் விழாக் குழுவினரால் ரொக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்தப் பந்தயத்தை காளையார் கோவில், காஞ்சிப்பட்டி, மரக்காத்தூர், முடிக்கரை, மறவமங்கலம், காயாஓடை, ஆண்டுரணி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சாலையின் இரு புறமும் நின்று கண்டு களித்தனர்.

கீழவலையம்பட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற மாட்டு வண்டிப் பந்தயம்.

ஜூன் 27–இல் வருங்கால வைப்பு நிதி குறைதீர் முகாம்

மதுரை, ஜூன் 20: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் சார்பில் வருங்கால வைப்பு நிதி குறைதீர் முகாம் (நிதி உங்கள் அருகில்) மதுரை மண்டலத்தில் ஜூன் 27–ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மதுரை வருங்கால வைப்பு நிதி அலுவலக மண்டல ஆணையர் அமியகாந்த் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மத்திய அரசின் தொழிலாளர், வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் சார்பில், மதுரை மண்டலத்துக்குள்பட்ட 6 மாவட்டங்களில் வருகிற 27–ஆம் தேதி காலை 9 மணிக்குத் தொடங்கி இந்தக் குறைதீர் முகாம் நடைபெறும்.

வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் பதிவு பெற்ற தொழில் நிறுவனங்கள், சந்தாதாரர்கள், ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள், வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் விலக்கு பெற்ற நிறுவனங்களில் உள்ள பி.எப். டிரஸ்ட் சந்தாதாரர்களின் வருங்கால வைப்பு நிதி தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்த முகாம் நடைபெறும். முகாமில் பங்கேற்பவர்கள் t.ly/nPTt என்ற இணையதள முகவரியில் தங்களது விவரங்களைப் பதிவு செய்திருக்க வேண்டும்.

மாவட்டம் வாரியாக முகாம் நடைபெறும் இடங்கள்:

மதுரை: அழகர்கோவில் சாலை, காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரி.

சிவகங்கை: கோவிலூர், ஆண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

ராமநாதபுரம்: முதுகுளத்தூர், பர்ஸ்ட் கார்மெண்ட்ஸ்.

தேனி: சி.புதுப்பட்டி, ஆர்.ஆர். சர்வதேசப் பள்ளி.

விருதுநகர்: ராஜபாளையம் வர்த்தக, தொழில் சங்கம்.

திண்டுக்கல்: சிலுவத்தூர் சாலை, எஸ்.எஸ்.எம்.வி. பள்ளி.

சர்வதேச கடல் எல்லை: மத்திய இணை அமைச்சர் ஆய்வு

ராமேசுவரம், ஜூன் 20: இந்திய–இலங்கை இடையிலான சர்வதேச கடல் எல்லையை மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் சஞ்சய் சீத் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் அருகேயுள்ள தனுஷ்கோடியில் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் சஞ்சய் சீத் ராணுவ விமானத்தில் உச்சிப்புளியில் உள்ள ஐ.என்.எஸ். பருந்து கடற்படை முகாமுக்கு வியாழக்கிழமை வந்தார். அங்கு கமாண்டர், ராணுவ வீரர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, காரில் மண்டபத்தில் உள்ள இந்திய கடலோரக் காவல் படை அலுவலகத்துக்கு அமைச்சர் சென்றார். அங்கு இந்திய கடலோரக் காவல் படை கமாண்டர், வீரர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர். பின்னர், ஹோவர் கிராப்ட் கப்பலில் இந்திய–இலங்கை எல்லைப் பகுதிக்குச் சென்று அவர் ஆய்வு செய்தார். இரவு இந்திய கடலோரக் காவல் படை அலுவலகத்தில் தங்கினார்.

வெள்ளிக்கிழமை காலை ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் ஸ்படிகலிங்கம் பூஜையில் அவர் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்கிறார்.

பின்னர், தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

பயிற்சி முடித்த செவிலியர் மாணவிகளுக்கு பணி நியமன ஆணை

பழனி, ஜூன் 20: பழனியில் தனியார் செவிலியர் பயிற்சி மையத்தில் புதிய மாணவிகளுக்கு வரவேற்பு விழா, பயிற்சி முடித்த மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு செவிலியர் பயிற்சி மைய தாளாளர் மாசிலாமணி காளியப்பன் தலைமை வகித்தார். சாய்கிருஷ்ணா மருத்துவமனை இயக்குநர் சுப்புராஜ், பிபிஎன் மருத்துவமனை இயக்குநர் விமல்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்டச் செயலர் சுப்பிரமணி, மாவட்டப் பொருளாளர் செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இதில் முதலாமாண்டு மாணவிகளுக்கு, இரண்டாமாண்டு மாணவிகள் பயிற்சி காலத்தில் பணியாற்றுவதன் சிறப்புகள் குறித்து விளக்கினர். தொடர்ந்து, கடந்தாண்டு பயிற்சி முடித்த அனைத்து மாணவிகளுக்கும் பல்வேறு மருத்துவமனைகளில் பணியாற்ற பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

ஏற்பாடுகளைக் கல்வி நிறுவன முதல்வர் உமா மகேஸ்வரி, துணை முதல்வர் சங்கீதா உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

பழனியில் தனியார் செவிலியர் பயிற்சி மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சி முடித்த மாணவிகளுக்கு கேடயங்களை வழங்கிய சாய்கிருஷ்ணா மருத்துவமனை இயக்குநர் சுப்புராஜ், மையத்தின் தாளாளர் மாசிலாமணி. உடன் அரிமா சங்க முன்னாள் மண்டலத் தலைவர் அசோக் உள்ளிட்டோர்.

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months there after I, **SIVA RAJA.H,** S/o. **Hari Hara Ayyappan,** Aged 22 years, Permanently Residing at W-9-3/304, Main bazar Street, Sri Sadguru Bhavanam, Uthamapalayam, Theni district - 625 533, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar council buildings, High Court campus Chennai- 104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

SIVA RAJA.H

AFFIDAVIT

I, **S. ANITHA** Spouse of **Sivakumar K** resident of Kamatchi Amman Kovil Street, Palanichettipatti, Theni, Pin - 625 531. have changed my name from **S. ANITHA** to **ANITHA. D** vide Affidavit dated **18.06.24** at Theni

SBI

பாரத ஸ்டேட் வங்கி

மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை

கார்போரேட் மையம், மும்பை

தொலைபேசி: 022-22820427

கியூ ஆர்-ஐ ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கவும்.

வழக்கமான /ஒப்பந்த அடிப்படையில் துறை வல்லுநர் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளின் பணியமர்த்தம்

வழக்கமான/ஒப்பந்த அடிப்படையில், கீழ்க்கண்ட பதவிகளுக்காக இந்திய குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

வ. எண்	பதவியின் பெயர்	காலியிடம்	சமமான/ ஒப்பிடத்தக்க பதவிநிலை	வகை
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/01			
1	பாதுகாப்பு வங்கியியல் ஆலோசகர் (டிபிஏ) - விமானப்படை	1	பொருந்தாது	ஒப்பந்த அடிப்படையில்
2	வட்டப் பாதுகாப்பு வங்கியியல் ஆலோசகர் (சிடிபிஏ)-பெங்களூரு	1	பொருந்தாது	ஒப்பந்த அடிப்படையில்
3	வட்டப் பாதுகாப்பு வங்கியியல் ஆலோசகர் (சிடிபிஏ), சண்டிகர்	1	பொருந்தாது	ஒப்பந்த அடிப்படையில்
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/02			
4	பட்டயக் கணக்காளர் (வல்லுநர்)	9	எம்எம்ஜிஎஸ்-II	வழக்கமான அடிப்படையில்
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/03			
5	ஆராய்ச்சி ஆய்வாளர் - அந்நியச் செலாவணி	1	எம்எம்ஜிஎஸ்-III	ஒப்பந்த அடிப்படையில்
6	ஆராய்ச்சி ஆய்வாளர் - பங்கு	2	எம்எம்ஜிஎஸ்-III	ஒப்பந்த அடிப்படையில்
7	ஆராய்ச்சி ஆய்வாளர் - தனியார் பங்கு	2	எம்எம்ஜிஎஸ்-III	ஒப்பந்த அடிப்படையில்
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/04			
8	கால்நிலை இடர் நிபுணர்	2	எம்எம்ஜிஎஸ்-III	வழக்கமான அடிப்படையில்
9	சந்தை இடர் நிபுணர்	3	எம்எம்ஜிஎஸ்-III	வழக்கமான அடிப்படையில்
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/05			
10	வர்த்தக நிதி அதிகாரி (எம்எம்ஜிஎஸ்-II)	150	எம்எம்ஜிஎஸ்-II	வழக்கமான அடிப்படையில்
	விளம்பர எண் CRPD/SCO/2024-25/06			
11	மூத்த துணைத் தலைவர் (உள்கட்டமைப்பு பாதுகாப்பு மற்றும் சிறப்புத் திட்டங்கள்)	1	டிஜிஜிஎஸ்-VI	ஒப்பந்த அடிப்படையில்
12	மூத்த துணைத் தலைவர் (தகவல் பாதுகாப்பு செயல்பாடுகள்)	1	டிஜிஜிஎஸ்-VI	ஒப்பந்த அடிப்படையில்

ஆன்லைனில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் ஆன்லைனில் விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, அனுபவம், முந்தைய பணி விவரங்கள் ஆகியவை), காலியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் https://bank.sbi/web/careers/current-openings வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் வலைதளத்திலுள்ள "CONTACT US" —> "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும் (https://bank.sbi/web/careers/post-your-query).

- **ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 07.06.2024-லிருந்து 27.06.2024 வரை.**

இடம்: மும்பை

தேதி : 07.06.2024

பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிஎம்)

SOUTH INDIAN Bank

Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்: முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/29/2024-25 தேதி: 19.06.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ம் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. S.இமாம் அஹமது ஹுஸைன், [M/s.சிராஜ் மில்க் ஏஜென்ஸி உரிமையாளர்], எண்.2/1, M.K.காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.
மேலும் இருப்பிடம்: கதவு எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

2) திருமதி. I.கௌஸியா, எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.
மேலும் இருப்பிடம்: எண்.2/1, M.K.காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 18.06.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.64,09,149.19-ஐ (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து ஒன்பதாயிரத்து நூற்றி நாற்பத்தொன்பது மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வருவிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 15.07.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: திருமதி. I. கௌஸியா

சொத்து விபரம்: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பிள்ளையார்நத்தம் கிராமம், S.No. 82/1, Re.S.No.82/1B3-ன்கீழ் அமைந்துள்ள 62 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், வண்டிப்பாதை மற்றும் நடைபாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பிற உபகரணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து திருமதி. I. கௌஸியா என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவகத்தில் 22.08.2019 தேதியில் பதிவுபெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.4175/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: S.No. 82/1-லுள்ள 259 சென்ட் இடத்தில் 58.5 சென்ட் அளவுள்ள சொத்து, கிழக்கே: S.No. 82/A-லுள்ள சொத்து, தெற்கே: S.No. 83 & 83/3-லுள்ள சொத்து, மேற்கே: வடக்கு-தெற்காக வண்டிப்பாதை.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.40,18,000/- (ரூபாய் நாற்பத்து லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.4,01,800/- (ரூபாய் நான்கு லட்சத்து ஆயிரத்து எண்ணூறு மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	15.07.2024 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த விலங்கங்கள்	30.03.2022 முதல் 01.09.2023 வரை விலங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Ph. No. 0452 2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், திண்டுக்கல் கிளையின் மொபைல் எண். 8056531536 -ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை

அங்கீகாரம் பெற்ற அலுவலர்